# இரட்சிப்பு
## RATCHIPPU

RATCHIPPU = SALVATION



Volume-13 | May - 2024 | Issue-12

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-







# PRAYER-WINDOW PRAYER-WINDOW

# ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் மே - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 10-05-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 17-05-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 24-05-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS:**

MOBILE:
9962924900/7871676100

WHATSAPP:
9789914463/7871676100

E-MAIL:
sjddharmaraja@gmail.com

POSTAL ADDRESS:
REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR,
NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**

NAME:
DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO:
601071548.

BANK & BRANCH:
INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE:
IDIB000N122.

BANK ADDRESS:
NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

GOOGL-PAY (G-PAY) NAME:
REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER:
9789914463

QR CODE
FOR SCANNING

OUR WEBSITE:
www.ratchippu.com

Rev. Dharmaraja S.J.D

UPI ID: sjddharmaraja@okhdfcbank

**வேத-வரிகள்-161** **2கொரி - 13:14**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், பராபரனுடைய அன்பும், பரிசுத்த ஆவியோடு ஐக்கியமும், உங்கள் அனைவரோடேயும் இருக்கக்கடவது. ஆமன். | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென். | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனின் அன்பும், பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமும், உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென். |

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-60
பாகம்-60


SIS.C. ANGEL

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவருமான இயேசு கிறிஸ்துவினால் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. வெளி–1:5

Grace and peace be unto you from Jesus Christ, the faithful witness and the first born of the dead. Rev-1:5

FAITHFUL WITNESS MARTYS PISTOS

## உண்மையுள்ள சாட்சி

மார்டைஸ் பிஸ்டோஸ்

உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியுமாய் இருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மே மாத உழைப்பின் மேன்மையின் வாழ்த்துக்கள்.

**சங்-89:1** கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்; உமது உண்மைகளைத் தலைமுறை தலைமுறையாக என்வாயினால் அறிவிப்பேன்.

**1தீமோ-1:12** என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். உண்மையுள்ள சாட்சி அவரே.

லூசிபரின் கையில் அகப்பட்ட இந்த பூமியிலுள்ள ஆத்துமாக்களை மீட்டெடுக்கிற கிருபையை, தமது வல்லமையை கர்த்தர் தம் பிள்ளைகளுக்குத் தருகிறார்.

**உபா-7:9** எங்கள் தேவனாகிய இயேசு ஒருவரே ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறோம். முழு இருதயத்தோடும் உமது சிலுவைத் தியாகத்தை நினைவுகூர்ந்து உம்மில் அன்புகூறுகிறோம். உமது கற்பனைகளைக் கைக்கொள்வோம் என உறுதியெடுக்கிறோம்.

**தேவனின் பதில்:** ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் நானே. அல்லேலூயா!

**ஜெபம்:** சொல் தவறாத உண்மைக் கிறிஸ்துவே உமக்கு ஸ்தோத்திரம். எங்கள் வாழ்வில் உமது உண்மையைக்கொண்டு சத்தியம் பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே? (சங்-89:49). உமது உண்மையும் உமது கிருபையும் எங்கள் வாழ்வில் நிறைவேறுவதாக (சங்-89:33,34). உமது நாமத்தினால் எங்கள் கொம்பு உயருவதாக (சங்-89:24). ராஜாக்கள் கண்டு எழுந்திருந்து, பிரபுக்கள் பணிந்து கொள்வார்கள் (ஏசா-49:7) என்ற வசனம் இந்திய பிரதமர் தேர்வில் நிறைவேறுவதாக. கர்த்தருடைய ஆலயத்தில் ஸ்தோத்திரத்துடன் ஸ்தோத்திரக் காணிக்கை செலுத்த உமது கிருபையை ஊற்றும்படி உண்மையுள்ளவராம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே! ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தேவசெய்தி...



அருட்திரு. சைமன் சாமுவேல்

# தூய ஆவியானவரின் வருகையும் திரித்துவத்தின் நிறைவும்

## The coming of the Holy Spirit and the consummation of the Trinity

2கொரிந்தியர்-13:14

**Rev. D. Simon Samuel**

PRESBYTER, CSI PODHATURPET PASTORATE, THIRUVALLUR DISTRICT, SOUTH INDIA

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு, இரட்சிப்பு இதழ் வழியாய் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

'திரித்துவம்' (TRINITY) என்பது கிறிஸ்தவத்தின் அடிப்படையான மற்றும் அவசியமான ஒரு தத்துவமாக இருப்பினும் இதனை புரிந்துகொள்ளுவதில் பலருக்கு சிரமங்கள் உள்ளன. ''திரித்துவத்தை ஏற்க மறுப்போர் தம் ஆத்துமாவை இழப்பர், திரித்துவத்தை விளக்க நினைப்போர் தம் மனதை இழப்பர்'' என்று 3ம் நூற்றாண்டின் இறையியலாளர் தூய. அகஸ்டின் குறிப்பிடுகிறார். தூய ஆவியானவரின் நிறைவையும், திருமறை அறிவையும் பெற்றிருந்த பரி. பவுல், அதுவரை திருமறையில் இல்லாத திரித்துவத்தின் வரையறையை 2கொரி-13:14ல் மிக எளிமையாக, கொரிந்து திருச்சபைக்கு வாழ்த்தாக, ஆசீர்வாதமாக, ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும்'' என குறிப்பிடுகிறார். இது திரித்துவத்தை வரையறுப்பதோடு, திரித்துவம் முழுமைபெற தூய ஆவியானவர் தேவை என்பதையும் உணர்த்துகிறது. 'மே' மாதம் தூய ஆவியானவரின் வருகை மற்றும் திரித்துவத்தின் நிறைவைக் கொண்டாடும் (PENTECOST SUNDAY & TRINITY SUNDAY) காலமாகும். திருமறையில் மறைந்திருக்கும் திரித்துவத்தையும் அதை நமக்கு வெளிப்படுத்தும் ஆவியானவரையும் குறித்து தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

**அறியப்படாத அனாதிதேவன்:**(யாத்-3:13)

''இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்'' (யாத்-3:13).

திருமறை வரலாற்றின் முதல் மனிதனாகிய ஆதாம் மற்றும் நம் மூதாதையரான ஆபிரகாம் தொடங்கி தீர்க்கதரிசியகிய மோசேயின் காலம் வரை, மக்கள் தாங்கள் ஆராதித்த கடவுளின் பெயரோ, தெளிவான வெளிப்பாடோ இல்லாமல் இருந்தனர். ஏனெனில் 5-ஆகமங்களின் ஆசிரியரான மோசேதான் ஆதியில் 'தேவன்' இருந்ததாகவும், ஜலத்தின்மேல் 'ஆவியானவர்' இருந்ததாகவும், தமது 'வார்த்தை'யை கொண்டு கடவுள் அனைத்தையும் படைத்ததாகவும் குறிப்பிடு கிறார். ஓரேபில் மோசே தேவனை சந்தித்தபோதுதான் கடவுள் தமது பெயரை '**இருக்கிறவராகவே இருக்கிறேன்**' என்று கூறி, தமது 'நித்திய' தன்மையை சொல்லுகிறதை நாம் யாத்-3:13,14,15 வசனங்களில் வாசிக்கிறோம். இத்தகைய குழப்பமான சூழல்களைத் தாண்டி, தீர்க்கர்கள் மற்றும் ராஜாக்களின் காலத்தில் தான் ஜனங்கள் கடவுளின் வார்த்தையைக் கேட்கவும், கடவுள் யார்? என்பதைப் புரிந்துகொள்ளவும் முடிந்தது.

தீர்கதரிசிகள் மூலம் கடவுள் தம்மையும் தமது வார்த்தையையும் வெளிப் படுத்துவதில் பெரும் பங்காற்றியவர் '**தூய ஆவியானவர்**' என்றால் அது மிகையல்ல. தீர்க்கதரிசிகள் மேல் எப்போதெல்லாம் ஆவியானவர் இறங்கி வந்தாரோ அப்போதெல்லாம் அவர்கள் இறைவாக்கு உரைத்ததை நாம் காண முடிகிறது (1சாமு-10:10, எண்-11:29). பழைய ஏற்பாட்டில், அநாதி தேவனின் இருப்பையும் திரித்துவத்தின் இருப்பையும் வெளிப்படுத்தியதில் ஆவியானவரின் பங்கு பெரியது. தூய. அகஸ்டின் கூறியது உண்மையே திரித்துவத்தை விளக்க நினைப்பவர் தம் மனதை இழப்பர். எனினும் நம் முயற்சியை தூய ஆவியானவரின் துணையோடு தொடருவோம்.

**அறியப்படாத ஆண்டவர் இயேசு:** (யோவா-1:10),

''அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, ஆனால், உலகமோ அவரை அறியவில்லை.'' (யோவா-1:10).

இயேசுவின் மாம்சீக வெளிப்பாட்டிற்கு முன் அவர் 'வார்த்தை'யாக இருந்தார் என்று யோவான் நற்செய்தியிலும் (யோவா-1:1-3), கடவுளின் ஞானமாக, கிருபையாக வெளிப்பட்டார் என்று சாலமோன் ஞானியின் எழுத்துக்களிலும் (நீதி-8:22-31) நாம் காணமுடிகிறது. தீர்கதரிசனத்தின் நிறைவாக இயேசு கிறிஸ்து அவதரித்திருந்தாலும், ஞான சாஸ்திரிகளாலும், ஆட்டிடையராலும் மட்டுமே அவர் அறியப்படிருந்தார். தமது 12ம் வயதில் இயேசு தேவாலயத்தில் கேள்விகள் கேட்டபோதும், போதகர்களும் இயேசுவின் பெற்றோரும்கூட அவரை அறிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர், என்று திருமுழுக்கு எடுத்து தூய ஆவியானவர் அவர்மீது புறாவைப்போல இறங்கினாரோ, அன்று முதல்தான் கடவுளின் நேச-குமாரனாக, திரித்துவத்தின் பங்காளராக அறியப்பட்டார் என்பதை நாம் மறந்து போகக்கூடாது. மேலும், கடவுள் இயேசுவை தூய ஆவியானவரால் நிரப்பினார் என்று சீமான் பேதுரு அப்போஸ்தலர் நடபடிகளில் (அப்-10:38, அப்-2:33) குறிப்பிடுகிறார். இவ்வாறு ஆதியில் வார்த்தையாக, ஞானமாக, கிருபையாக வெளிப்பட்ட இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டு உலகத்தால் அறியப்படாமல் இருந்தபோது, அனாதி கடவுளின் திட்டத்தாலும், தூய ஆவியானவரின்

வருகையாலும், கடவுளின் ஒரேபேறான மகனாகவும், திரித்துவத்தின் முக்கிய அங்கமாகவும் உலகிற்கு அறியப்பட்டார். தூய. அகஸ்டின் கூறியது உண்மையே திரித்துவத்தை ஏற்க மறுப்பவர் தம் ஆத்துமாவை இழப்பர். எனினும் நம் முயற்சியை தூய ஆவியானவரின் துணையோடு தொடருவோம்.

**அறியப்படாத ஆவியானவர்:** (யோவான்-14:17)

''உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிற படியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது'' (யோவா-14:17)

பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிதாவாகிய தேவனின் இருப்பை, அடையாளத்தை தன்னுடைய வருகையினால் வெளிப்படுத்திய தூய ஆவியானவர்; புதிய ஏற்பாட்டின் காலத்தில் அறியப்படாதிருந்த இயேசு கிறிஸ்துவின் இருப்பை, அடையாளத்தை தன்னுடைய நிறைவினால் வெளிப்படுத்திய தூய ஆவியானவர், இன்று தாமே சரியான அடையாளம் இல்லாமல், சரியாக அறியப்படாமல், திரித்துவத்தில் அங்கீகரிக்கப்படாத ஒரு நபராக, திரித்துவத்திற்கு அந்நியராக இருக்கிறார் என்பது மிகவும் வருந்தகூடிய விடயம். திரித்துவதிற்கு வரையறையை வகுத்த பவுல் தூய ஆவியானவரின் நிறைவினாலேயே அதை செய்தார் என்று முன்பு குறிப்பிட்டிருந்தோம், அவர் எபேசியருக்கு எழுதும்போது ''மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'' என்று கூறுகிறார்; மேலும் ரோமருக்கு எழுதும்போது ''கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல'' (ரோம-8:9) என்றும் கூறுகிறார். பழைய ஏற்பாட்டு தீர்க்கர் சகரியா ''கர்த்தருடைய ஆவியினாலேயே ஆகும்'' (சக-4:6) என்று உரைத்தார். பெந்தெகொஸ்தே நாளன்று சீடர்கள் மீது இறங்கின தூய ஆவியானவர் உலகமெங்குமிருந்து வந்திருந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றிணைத்தார். தூய ஆவியின் நிறைவைப்பெற்ற சீமோன் பேதுரு பிதாவாகிய தேவனை குறித்தும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை குறித்தும், யோவேல் தீர்க்கனால் முன்னறிவிக்கப்பட்ட தூய ஆவியின் அருட் பொழிவு குறித்தும் பிரசங்கித்தார், அதாவது திரித்துவ கடவுளை குறித்து பிரசங்கித்தார். அன்று, சுமார் 3000 பேர் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர்.


அன்பார்ந்த தேவபிள்ளைளே! திரித்துவ கடவுளை பிரசங்கித்தால் திருச்சபை வளரும்; திரித்துவத்தை முற்காலத்திலும், தற்காலத்திலும் வெளிப்படுத்திவரும் தூய ஆவியானவரின் துணையிருந்தால் மட்டுமே அது சாத்தியம் ஆகும். இந்த இறைபணியில் நம்முடைய பிதாவாகிய கடவுளாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் தூய ஆவியாராலும் நமக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம் மனதையும், ஆத்துமாவையும் திரித்துவ கடவுள்தாமே காத்து வழிநடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு. டி. சைமன் சாமுவேல்**

---

அருட்திரு. டி. சைமன் சாமுவேல், ஆயர், சி.எஸ்.ஐ. பொதட்டூர்பேட்டை குருசேகரம் (சென்னை பேராயம்), பொதட்டூர்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம், தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 84



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

Rev. Dr. சுரேஷ் ராஜன்

## சங்கீதம் – 84

EPISODE-84

**முன்னுரை:** அன்புக்குரிய இரட்சிப்பு வாசகர்களுக்கு ஆண்டவரும் இரட்சகரு மாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்வாண்டின் முதல் நான்கு மாதங்கள் ஆண்டவர் நம்மையும் நமது குடும்பங்களையும் அற்புதமாய் பாதுகாத்துள்ளார். ஆகவே ஆண்டவருக்கு நாம் நன்றி செலுத்துவோம். இந்த தியானத்தில் சங்கீதம் 84ல் இருந்து சில உண்மைகளை கற்றுக்கொள்வோம். இச்சங்கீதம் நமக்கு பல வகைகளில் ஊக்கம் தந்து, நம்மைக் கட்டியெழுப்பும் பாடலாக அமைந்துள்ளது. நம் வாழ்வில் பல நேரங்களில், நாம் இறைவனோடு இருக்கிறோமா? நமது செயல்களிலே அவர் பிரியமாய் இருக்கிறாரா? நம் வாழ்வு சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கிறதா? ஆவிக்குரிய ஆசீர் வாதங்கள் நம் வாழ்வில் உண்டா? போன்ற பல கேள்விகள் எழுகின்றன. அத்தகைய தருணங்களில் நமக்கு ஊக்கமளித்து, நாம் வெற்றியுள்ள வாழ்வு வாழ்வதற்கு தேவையான அடிப்படை குணாதிசயங்களை நமக்கு கற்றுக் கொடுக்கும் ஒரு அற்புதமான சங்கீதமாகும் இது. மூன்று முக்கிய குறிப்புகளை இச்சங்கீதத்தின் வெளிச்சத்தில் நான் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்

**தேவனை தேடுதல்** (வச 4:1-4): தேவனை தேடுதல் என்பது ஒரு அற்புதமான அனுபவம். நம் வாழ்வில் எத்தனையோ காரியங்களை தேடி அலைகிறோம் ஒரு பேனா வாங்கும்போதுகூட, அது எப்படி தோற்றமளிக்க வேண்டும்? அதில் எப்படிப்பட்ட மை இருக்க வேண்டும்? அதன் விலை எவ்வளவாக இருக்க வேண்டும்? போன்ற பல காரணிகளின் அடிப்படையில் நமது தேடல் உள்ளது. அதே போல், நமது பிள்ளைகளின் திருமணம் என்று வரும்பொழுது நல்ல துணையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அதிகமான தேடல் முயற்சிகளை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் நித்தியமாக இறைவனோடு தங்குவதற்காக, பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதற்காக நாம் எவ்வித தேடல்களையும் செய்வதில்லை. பல நேரங்களில் நாம் குறுக்கு வழியில் ஆசீர்வாதத்தைப் பெற்றுவிடவேண்டும் என எண்ணி பல ஊழியக்காரர்களை நாடிச் செல்கிறோம் அதன் விளைவாக பல நேரங்களில் தவறான பாதையில் வழிநடத்தப்படுகிறோம். ஆனால், இந்த சங்கீதத்தின் ஆசிரியர், ஆண்டவரை நோக்கி கூப்பிட்டு அவரிடம் தமது தேடலை வெளிப்படுத்துவதை பார்க்கிறோம் ‘‘ஆண்டவரே! உமது உறைவிடம் எத்துணை அருமையானது! என் ஆன்மா ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக ஏங்கித் தவிக்கின்றது; என் உள்ளமும் உடலும் இறைவனை

மகிழ்ச்சியுடன் பாடுகின்றது. படைகளின் ஆண்டவரே! என் அரசரே! என் கடவுளே! உமது பீடங்களில் அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்துள்ளது; சிட்டுக் குருவிகளுக்கு தங்கள் குஞ்சுகளை வைத்திருப்பதற்கு கூடும் கிடைத் துள்ளது. உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்; அவர்கள் எந்நாளும் உம்மைப் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள்'' (வச-2,3,4 பொது மொழிபெயர்ப்பு). சங்கீதக்காரர் எத்துணை அருமையாக தந்நிலை உணர்ந்து இறைவனின் பிரசனத்தை தேடுவதை வெளிப்படுத்துகிறார் என்பதைப் பாருங்கள். என்றைக்காவது நம் ஆவிக்குரிய வாழ்வில், இறைவனுடனான நம் உறவில் குறைபட்டிருக்கிறோம் என்பதை நாம் யோசித்துப் பார்த்ததுண்டா? இறைவனை விட்டு தூரமாக இருக்கிறோமே, இறைவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்க முடியவில்லையே என்ற எண்ணங்கள் எப்போதாவது நமக்கு வந்தது உண்டா?

அன்புக்குரியோரே! நாமும் தேவனை முழு மனதோடு தேடுவோம். தாவீது தனது மகனைப் பார்த்து, ''நீ தேவனைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்'' (1நாளா-28:9) எனச் சொல்லுகிறார். ''தேடுங்கள் அப்பொழுது கண்டறிவீர்கள்'' (மத்-7:7,8) என்று ஆண்டவர் இயேசு சொன்னார் அல்லவா? நாம் நிர்விசாரமாக, நம் வாழ்வை குறித்து அக்கறை இல்லாதவர்களாக இருந்தால், நம்முடைய பரிதாபமான முடிவை நாமே நிர்ணயித்துக் கொள்கிறோம். இன்றே அவரை கருத்தாய் தேட ஆண்டவர் நமக்கு உதவி செய்வாராக.

**தேவனோடு பயணித்தல்** (வச 5-9): இறைவனை தேடுவது மற்றும் அறிந்து கொள்வது மாத்திரமல்ல அவரோடு கூட நாம் பயணிப்பது மிகவும் முக்கிய மானதாகும். பல நேரங்களிலே நாம் நமது கிறிஸ்தவ வாழ்வில் திருப்தி அடைந்தவர்களாய், ஆண்டவரோடு உறவு கொள்வதிலும் அவரோடு கரம் கோர்த்து நடப்பதிலும் தவறி விடுகிறோம். ஆனால், இந்த சங்கீதத்தில் ''உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வை யான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின்மேல் பலமடைந்து சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்'' (வச 5-7) என்று எழுதப்பட்டுள்ளது. கடவுளுடைய பிள்ளைகள் தங்கள் பயணத்தில் பல கடினமான அனுபவங்க ளிடையே செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படலாம், அப்படிப்பட்ட சூழ்நிலை களிலும் இறைவன் மீது பற்றுறுதி கொண்டவர்களாக அவரது கரம்பிடித்து நடப்பவர்கள் தங்களது கண்ணீரின் அனுபவத்தையும் அற்புதமான அனுபவமாக மாற்றும் கிருபையைப் பெற்றுகொள்கிறார்கள். அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைகிறார்கள் பிரச்சனைகளை கண்டு துவண்டு போவதில்லை. மாறாக, இறைவன் சந்நிதியில் என்றும் தொடர்ந்து காணப்படும் மக்களாக இருக்கிறார்கள். எத்தனை அருமையான அனுபவம் இது.

அன்பான தேவ மக்களே! நாம் இறைவனோடு பயணிப்பதில் எதேனும் சிக்கல் இருக்கிறதா? என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். சோதனைகள், பிரச்சனை களைக் கண்டு பின்வாங்காமால் விசுவாசத்தில், ஆண்டவரை நம்பி இந்த

பயணத்தில் பங்கெடுக்கும்பொழுது அவர் எல்லா சூழ்நிலைகளிலும் நம்மை வழிநடத்த வல்லவராய் இருக்கிறார்.

**தேவ பிரசன்னத்தில் தங்குதல்** (வச 10-12): ஆண்டவரை தேடி கண்டுகொள்ள வேண்டும். அவரது கரம்பிடித்து அனுதினமும் நடக்க வேண்டும்; இறைமக்களின் ஐக்கியத்திலும் ஆண்டவரின் பிரசன்னத்திலும் நிலைத்திருக்கவேண்டும். இது குறித்து சங்கீதக்காரர் சொல்லும்போது, களியாட்ட அரங்கத்தைவிட கடவுளின் திருச்சன்னிதியே இன்பமானது என்கிறார். ‘‘வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாட்களினும் உம் கோவில் முற்றங்களில் தங்கும் ஒருநாளே மேலானது; பொல்லாரின் கூடாரங்களில் குடியிருப்பதினும், என் கடவுளது இல்லத்தின் வாயிற்காவலனாய் இருப்பதே இனிமையானது’’ (வச-10) என்றும் கூறுகிறார்.

அன்பானவர்களே! ஆண்டவரின் பிள்ளைகளான நாம் ஆலயம் செல்வதை அற்பமாய் எண்ணாமலும், விசுவாசிகளின் ஐக்கியத்தில் கடவுளின் பிரசன்னத்தை அனுபவிப்பதை தவறவிடாமலும் இருப்போம். ‘‘சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்’’ (எபி-10:25) என வேதம் சொல்லுகிறது.

**முடிவுரை:** அன்பான தேவ பிள்ளைகளே! இந்த சங்கீதம் நமது விசுவாச வாழ்க்கையை கட்டி எழுப்பி, நமக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய அருமையான பாடலாகும். கடவுள் தாமே அவரை தடவியாகினும் கண்டுபிடித்து அவருடைய வழியில் நடந்து அவரது பிரசன்னத்தால் நிறைந்திருக்கும் அனுபவத்தை நம் அனைவருக்கும் தந்தருள்வாராக. ஆமென்

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

---

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகமம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

---

# வேதாகம போட்டிகள்-2023



**பரிசுபெற்றோர் பட்டியல் (பக்கம் 14& 15)**

## பரிசு பெற்றோருக்கு வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவுக்குள் அன்புடையீர்...

கடந்த 2023ம் ஆண்டு நாம் நடத்திய வேதாகம போட்டிகளில் தொடர்ந்து சரியான பதில்கள் எழுதி பரிசு பெறுகின்ற போட்டியாளர்கள் (வாசகர்கள்) அனைவரையும் இயேசுவின் திருப்பெயரில் அன்புடன் வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம். போட்டிகளில் பங்குபெற்ற அனைவருக்கும் நன்றி. பரிசுகள் வரும் ஜுன் மாதத்திற்குள் அனுப்பிவைக்கப்படும். **இப்பரிசுகள் கடந்த ஆண்டுக்கான பரிசுகள் (2023 காலண்டர் ஆண்டு) என்பதைப் போட்டியாளர்கள் நினைவில் கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.** கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

ஆசிரியர் இயக்குநர்

# வேதாகம போட்டி–162 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா மோகன்ராஜ் ERO
12) அரோமா சாத்ராக் TIN
13) ஆர்தர் மாசில்லாமணி CHE
14) அருள்செல்வி VIR
15) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
16) பாமா மாதவன் KAL-AP
17) பாலின் பிரியங்கா ஜாண் BAN
18) பெல்சி தங்கராஜ் CHE
19) பெனிட்டா பிராங்க்ளின் CHE
20) பெ.ஃ.ட்டி பிரின்ஸ் CHE
21) பியூலா அலெக்ஸ் CHE
22) பியூலா ஜேசுராஜன் PON
23) பியூலா ராஜசெல்வன் CBE
24) செலினா பென்சி வில்சன் DR, KUW
25) சந்திராபாய் மாசிலாமணி AVD
26) சந்திரலேகா KAL-AP
27) சந்திரா மேரி விஜயன் BAN
28) சந்திரா சாமுவேல் TIN
29) சார்லஸ் ஃபின்னி DR CHE
30) சார்லஸ் சாலோமோன் SHI-MEG
31) சார்லட் டேவிட் CHE
32) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
33) கிறிஸ்துதாஸ் GOP
34) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR TIN
35) கிறிஸ்டி ஞானராஜ் CHE
36) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
37) கிறிஸ்டி பொன்னுசுவாமி MDU
38) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
39) டெய்ஸி ஜெபதாஸ் TCY
40) டெய்ஸி சாம் KAL-AP
41) டேனியல் தாமஸ் TIN
42) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
43) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
44) தெபோராள் ஆனந்தமணி TUT
45) தெபோராள் D. VAN-CHE
46) டெல்வின் இம்மானுவேல் CBE
47) தேவமணி ஆபிரகாம் TUT
48) தேவநேசம் ராஜாசிங் CHE
49) டோராபாய் CHE
50) எபனேசர் கிரேஸ்லின் சாந்தி TIN
51) எலிசபெத் செல்லத்துரை CHE
52) எமிமாள் மில்டன் CHE
53) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா MDU
54) எஸ்தர் D.R. TIN
55) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
56) குளோரி ரவீந்திரன் TIN
57) ஞானம் ஜெபராஜ் TIN
58) ஞானராணி G. TVL
59) ஞானசெல்வி மோசஸ் NJ-USA
60) ஞானசுந்தரி நாகராஜன் TIN
61) கோல்டா ஜேசுபாதம் MUM
62) கிரேஸ் டேனி TEN
63) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
64) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
65) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
66) கிரேனா அன்புரோஸ் CHE
67) கிரேஸியா ஜெயபால் CHE
68) கிரிசெல்டா செய்லர் CHE
69) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
70) ஹெலன் திலக் TUT
71) ஹேமா அஜீத் CHE
72) ஹேமா கேப்ரியேல் BAN
73) ஹெப்சி அசரியா PON
74) ஹெப்சிபா மங்களராஜ் TIN
75) ஹிம்லா ராஜகுமாரி CHE
76) இளவரசி ஜோபிதா CBE

77) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
78) இந்திரா கெத்ஸி டேவிட் DR. TIN
79) ஜமீலா செல்வராஜ் CHE
80) ஜேன் தர்மராஜ் MAR
81) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
82) ஜான்ஸி சந்தியா MAR TIN
83) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
84) ஜெபா ஜெயராஜ் AVD
85) ஜெபக்குட்டி மோசஸ் TIN
86) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
87) ஜெபசீலி கிளின்டன் CHE
88) ஜெபா சீனி MAR TIN
89) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
90) ஜெமீலா நிக்ஸன் CHE
91) ஜெனிலா CHE
92) ஜெனித்தா செல்வின் TIN
93) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DHA
94) ஜெரின் ஸ்டீபன் MUM
95) ஜெஸி செல்லதுரை CBE
96) ஜெஸி ஜெயக்குமார் TIN
97) ஜெயா ஆல்பர்ட் KUM
98) ஜோனா ஸ்டீபன் AVD
99) ஜோஸ்பின் ஜெஸி CHE
100) ஜாய்ஸ் பாண்டியன் CHE
101) ஜூலியட் ஜெபா CHE
102) ஜூலியட் ஜெயக்குமார் TIN
103) கலா கிருபாகரன் TIN
104) கலையரசி செல்வராஜ் CHE
105) கஸ்தூரி எலியாஸ் TIN
106) கிருபாவதி S. VAN-CHE
107) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
108) லதா மைக்கேல்ராஜ் CHE
109) லீலா டேவிட் CHE
110) லீலா ஜோஸப் CBE
111) லீனா எலிசபெத் CKA-TPT
112) லில்லி ஜாண்ஸன் CHE
113) லிஸி டென்சிங் TIN
114) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
115) மல்லிகா V. CHE
116) மரிய பாப்பா CHE
117) மரியாள் ஜே.எஸ். TUT
118) மெஜிலா ஜோஷ்வா TUT
119) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
120) மெரிட்டா ஜெயபாலன் TCY
121) மியூரியல் புஷ்பராஜ் CHE
122) நகோமி நிர்மலா CHE
123) நிக்ஸன் எவர்பிரைட் TIN
124) ஆலிவ் ஜெயபாலன் CBE
125) பாக்யபாய் ஆரோன் TIN
126) பெர்சி பால் பொன்சிங் TUT
127) பிங்க்லின் சந்தோஷ் CHE
128) பிரேமா பூபாலன் AVD
129) பிரேமா ஜானி TEN
130) பிரேமா ஸ்டாலின் CHE
131) பிரின்ஸ் தயாநிதி CHE
132) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
133) பிரிசில்லா தாஸ் CHE
134) பிரிஸ்கில்லாள் சசி CBE
135) பிரியா ராஜ்குமார் CHE
136) ரேச்சல் கனகராஜ் CBE
137) ராஜபிரமீளா TPT
138) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
139) ராஜ்மேரி சார்லஸ் KER
140) ரமோலா அதிசயராஜ் TIN
141) ராணி ஃபுளோரா APM-TEN
142) ராணி பிரபாகர் TIN
143) ராணி சாமுவேல்ராஜ் CHE
144) ரத்னாவதி பாண்டியன் CHE
145) ரோஸ்லின் மார்கிரெட் CHE
146) ரோஸி ஸ்டீபன் CHE
147) ரூபவதி நோபிள் TIN
148) ரூத் HAPP-TCY
149) ரூத் ஜாண்ஸன் TIN
150) சலோமி மனோகர் DR. CHE
151) சாம்பு ஜெயச்சந்திரன் MDU
152) சாமுவேல் டேவிட் TPT
153) சாரா பாலசிங் MDU
154) சரோஜா செல்வராஜ் CHE
155) சரோஜினி எலிசபெத் CHE
156) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP

வேதாகம போட்டி–162 சரியான பதிலளித்தோர்– 11ம் பக்கத் தொடர்ச்சி

157) செல்வராணி ஆல்பர்ட் CHE
158) செல்வராணி G. CHE
159) செல்வி அமிர்தராஜ் TVR
160) செல்வி S. VAN-CHE
161) ஷாலி எடிசன் CHE
162) சாந்தி ஆல்பர்ட் PCT
163) சாந்தி ஆசேர் TIN
164) சாந்தி ஜெயசீலன் CHE
165) ஷீபா சாம்ஸன் CHE
166) ஷீலா இஸ்ரேல் TCY
167) ஷெரீன் ஜெபராஜ் PNR-TVL
168) சில்வியா ஃபின்னி DR. CHE
169) சவுந்தரம் சாலமோன் CHE
170) ஸ்டெல்லா டேவிட் TUT
171) ஸ்டெல்லா கனகராஜ் CHE
172) ஸ்டெல்லா சூசைய்யா TUT
173) சுகிர்தா ஆல்வின் CHE
174) சுகிர்தா சின்னதுரை TIN
175) சுஜாதா சாமுவேல் CHE
176) சுமித்ரா B. CHE
177) சுசீலா தியோடர் TCY
178) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
179) தனசீலி ஞானராஜ் CHE
180) தாரா மாணிக்கம் CHE
181) தெல்மா ஸ்டேன்லி MDU
182) உமா குளோரி CHE
183) வனஜா ஹெர்பர்ட் TIN
184) வசந்தா அன்பன் TIN
185) வசந்தா சந்திரசேகர் CBE
186) வசந்தா துரைராஜ் OFT-TCY
187) வசந்தி கருணாகரன் CHE
188) வசந்தி வாசன் CHE
189) விஜயராணி A. CHE
190) விஜி டேனியல் CHE
191) விமலா ஜெயக்குமார் TUT
192) விண்ணரசி ரோஸ் CHE
193) வினோலியா ஜேம்ஸ் TUT
194) வினோலியா வில்சன் VAN
195) வைலட் கிறிஸ்டோபர் TIN

## வேதாகமப் போட்டி-161 சரியான பதிலளித்தோர்

1) கிரேனா அன்புரோஸ் CHE
2) அனிதா ஜாண் CBE

## வேதாகம போட்டி–162 (1கொரிந்தியர்) சரியான விடைகள்

1. அவனைக் கெடுப்பார் 1கொரி:-3:17
2. துப்புரவு-உண்மை எனும் 1கொரி:-5:8
3. அறிவு-அன்பு 1கொரி:-8:1
4. அன்பு 1கொரி:-13:13
5. பலவீனமானவை 1கொரி:-12:22
6. 23ஆயிரம் பேர் 1கொரி:-10:8
7. மோசேயின் பிரமாணம் 1கொரி:-9:9
8. யூதர்-கிரேக்கர் 1கொரி:-1:22
9. சரி - 1கொரி:-15:26
10. சரி - 1கொரி:-13:8
11. தவறு - 1கொரி:-11:31
12. தவறு - 1கொரி:-15:56
13. அ - சரீரம் 1கொரி:-6:13
14. அ - ஆவிக்குரியவன் 1கொரி:-2:15
15. இ - கிரயம் 1கொரி:-7:23
16. இ - பெலத்திலே 1கொரி:-4:20
17. புருஷன்-மனைவி 1கொரி:-7:4
18. தலைமயிர் 1கொரி:-11:6,14,15
19. அன்பு, விசுவாசம், நம்பிக்கை, அந்நிய பாஷை, தீர்.தரிசனம் 1கொரி:-13:8,13
20. அந்நிய பாஷை 1கொரி:-14:2

# வேதாகம போட்டி-163

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-05-2024

**வேத–பகுதி: 2கொரிந்தியர் முழுதும்**

1. யார் உத்தமனல்ல? யார் உத்தமன்?

2. கூடையில் வைக்கப்பட்டு, மதில்-ஜன்னல் வழியாய் யார் கைக்கு தப்பினார் பவுல்?

3. இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறவை எவை?

4. நாம் தரித்துக்கொண்டவர்களானால், எவ்விதமாய் காணப்படமாட்டோம்?

5. தேவனுக்கேற்ற துக்கம், மனஸ்தாபப்படுகிறதற்கு இடமின்றி எதை உண்டாக்குகிறது?

6. எவை அநித்தியமானவைகள், எவை நித்தியமானவைகள்?

7. யாரால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் பவுல் அடிபட்டார்?

8. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் எப்படி இராமல், ‘ஆம்’ என்றே இருக்கிறார்?

9. ‘நாம் தரிசித்து நடவாமல், பரிதவித்து நடக்கிறோம்’ - **சரியா தவறா**?

10. ‘கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு’ - **சரியா தவறா**?

11. ‘இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள்’ - **சரியா, தவறா**?

12. ‘நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே’ - **சரியா தவறா**?

13. இடித்துப்போட அல்ல ‘**இதற்கே**’ கர்த்தர் எனக்கு அதிகாரம் தந்தார் என்றார் பவுல்:
அ) எழுந்து கட்ட ஆ) பழுதுபார்க்க இ) ஊன்றக் கட்ட ஈ) அஸ்திபாரம் போட

14. சகல காரியங்களும் ‘**இத்தனை**’ சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்:
அ) மூன்று ஆ) ஒன்றிரண்டு இ) இரண்டு-மூன்று ஈ) நான்கைந்து

15. பிள்ளைகளுக்கு, பெற்றார்களே ‘**இவைகளை**’ சேர்த்துவைக்கவேண்டும்:
அ) புண்ணியங்களை ஆ) பொக்கிஷங்களை இ) உணவுகளை ஈ) உடைகளை

16. மேன்மைபாராட்டுகிறவன் ‘**இவரை**’ குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்:
அ) ஆவியானவரை ஆ) மோசேயை இ) சிருஷ்டிகரை (ஈ) கர்த்தரை

17. நதியில்-கடலில் வந்தவை, நாட்டில்-காட்டில் வந்தவை! சொந்தங்களால் வந்தவை, அந்நியரால் வந்தவை! காலிகளாள் வந்தவை, போலிகளால் வந்தவை! பட்டணங்களில் வந்தவை, **பவுலுக்கு** வந்தவை! **இவை என்ன?**

18. ஐந்தாகம மோசேயால் வந்த காடு! ஐந்து-காய கிறிஸ்துவால் சென்ற காடு! பழைய ஏற்பாட்டால் போகாத காடு! பாவ மன்னிப்பால் போகும் காடு! **இது என்ன காடு?**

19. பரமன் கட்டிய வீடு, பரலோகத்தில் வீடு! வாசஸ்தலமாம் வீடு, வாஞ்சையாய்த் தேடும் வீடு? **இது என்ன வீடு?**

20. மனந்திரும்ப துக்கம், மகிழ்ச்சி-தந்த துக்கம்! நஷ்டம்-தரா துக்கம், நியாயம் சொன்ன துக்கம்! பக்தி-ஆவல்-வெறுப்பு-பயம் பகிர்ந்தளித்த துக்கம்! **இது என்ன துக்கம்?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-05-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ்,
எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# இரட்சிப்பு வேதாகம போட்டிகள் - 2023
## பரிசு பெற்றோர் பட்டியல்

கடந்த 2023ம் ஆண்டில் நடத்தப்பட்ட இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் 1ம், 2ம், 3ம் பரிசு பெறுபவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

### 1. முதலாம் பரிசு பெறுபவர்கள்[12 மாதங்கள் விடை எழுதியவர்கள்]

1. அமலியா லேகநாதன் TVM
2. ஏஞ்சல் சி. TIN
3. ஏஞ்சல் ராஜதுரை CHE
4. ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
5. ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
6. ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
7. அரோமா சாத்ராக் TIN
8. ஆர்தர் மாசில்லாமணி CHE
9. அருள்செல்வி ஜான்ஸன் TIN
10. பெல்சி தங்கராஜ் CHE
11. பெனிட்டா பிராங்க்ளின் CHE
12. பியூலா ஜேசுராஜன் PON
13. செலினா பென்சி வில்சன் DR. KUW
14. சந்திராபாய் மாசிலாமணி AVD
15. சந்திரலேகா KAL-AP
16. சந்திரா சாமுவேல் TIN
17. சார்லட் டேவிட் CHE
18. கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
19. கிறிஸ்துதாஸ் GOP
20. கிறிஸ்டி ஞானராஜ் CHE
21. சிசிலி புஷ்பம் டேவிட் CHE
22. டெய்ஸி சாம் TUT
23. டேனியல் தாமஸ் TIN
24. டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
25. டேவிட் ஜே.ஆர். CHE/CBE
26. தேவமணி ஆபிரகாம் TUT
27. தேவநேசம் ராஜாசிங் CHE
28. டோராபாய் CHE
29. எலிசபெத் செல்லத்துரை CHE
30. எமிமாள் சாம் (ஜெஸிக்கா) MDU
31. எஸ்தர் D.R. TIN
32. எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
33. ஞானம் ஜெபராஜ் TIN
34. ஞானம் பிலிப் CHE
35. ஞானசெல்வி மோசஸ் USA
36. கோல்டா ஜேசுபாதம் MUM
37. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
38. கிரேஸி கிறிஸ்டோபர் CHE
39. கிரேஸியா ஜெயபால் CHE
40. கிரிசெல்டா செய்லர் CHE
41. ஹெலன் ஜான்சிராணி TIN
42. ஹெலன் ஜெனிபர் பாண்டியன் CHE
43. ஹெலன் திலக் TUT
44. ஹேமா அஜீத் CHE
45. ஹேமா கேப்ரியேல் BAN
46. ஹெப்சிபா மங்களராஜ் TIN
47. ஹிம்லா ராஜகுமாரி CHE
48. இளவரசி ஜோபிதா CBE
49. இன்பவல்லி கலைச்செல்வன் MDU
50. ஜமீலா செல்வராஜ் CHE
51. ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
52. ஜேன் தர்மராஜ் TIN
53. ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
54. ஜெபா ஜெயராஜ் AVD
55. ஜெபக்குட்டி மோசஸ் TIN
56. ஜெபசீலி கிளின்டன்CHE
57. ஜெமீலா நிக்ஸன் CHE
58. ஜெனித்தா செல்வின் TIN
59. ஜெரின் ஸ்டீபன் CHE
60. ஜெஸி செல்லதுரை CBE
61. ஜெஸி ஜெயக்குமார் TIN
62. ஜோனா ஸ்டீபன் AVD
63. ஜாய்ஸ் பாண்டியன் CHE
64. ஜூலியட் ஜெபா CHE
65. ஜூலியட் ஜெயக்குமார் TIN
66. கலையரசி செல்வராஜ் CHE
67. கஸ்தூரி எலியாஸ் TIN
68. கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
69. லதா மைக்கேல்ராஜ் CHE
70. லீலா டேவிட் CHE
71. லீலா ஜோஸப் CBE
72. லில்லி ஜாண்ஸன் CHE
73. லிஸி டென்சிங் TIN
74. மல்லிகா V. CHE
75. மணிமேகலை ஜெயக்குமார் TIN
76. மரிய பாப்பா CHE
77. மெஜிலா ஜோஷ்வா TUT
78. மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
79. மெரிட்டா ஜெயபாலன் TCY
80. மியூரியல் புஷ்பராஜ் CHE
81. நிக்ஸன் எவர்பிரைட் TIN
82. ஆலிவ் ஜெயபாலன் CBE
83. பாக்யபாய் ஆரோன் TIN
84. பிரேமா பூபாலன் AVD

85. பிரேமா ஸ்டாலின் CHE
86. பிரின்ஸ் தயாநிதி CHE
87. பிரிஸ்கில்லாள் சசி CBE
88. பிரிசில்லா தாஸ் CHE
89. ராஜபிரமிளா TPT
90. ராஜ்மேரி சார்லஸ் KER
91. ரமோலா அதிசயராஜ் TIN
92. ராணி பிரபாகரன் TIN
93. ராணி சாமுவேல்ராஜ் CHE
94. ரத்னாவதி பாண்டியன் CHE
95. ரெஜினா விக்டர் TIN
96. ரோஸ்லின் மார்கிரெட் CHE
97. ரோஸி ஸ்டீபன் CHE
98. ரூபவதி நோபிள் TIN
99. ரூத் ஜாண்ஸன் TIN
100. சலோமி மனோகர் DR. CHE
101. சாரா பாலசிங் MDU
102. சரோஜினி எலிசபெத் CHE
103. செல்வ அமுதா ஜார்ஜ் CHE
104. செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
105. செல்வராஜ் K. CBE
106. செல்வராணி ஆல்பர்ட் CHE
107. செல்வி அமிர்தராஜ் TVR
108. ஷாலி எடிசன் CHE
109. சாந்தி ஆஷெர் TIN
110. சாந்தி ஆல்பர்ட் PCT
111. சாந்தி ஜெயசீலன் CHE
112. ஷீபா சாம்ஸன் CHE
113. ஷெரீன் ஜெபராஜ் PAN
114. சவுந்தரம் சாலமோன் CHE
115. ஸ்டெல்லா கனகராஜ் CHE
116. சுகிர்தா ஆல்வின் CHE
117. சுஜாதா சாமுவேல் CHE
118. சுசீலா தியோடர் TCY
119. சுவர்ணலதா அற்புதராஜ் CHE
120. தாரா மாணிக்கம் CHE
121. தெல்மா ஸ்டேன்லி MDU
122. வனஜா ஹெர்பர்ட் TIN
123. வசந்தா அன்பன் TIN
124. வசந்தா சந்திரசேகர் CBE
125. வசந்தி கருணாகரன் CHE
126. வசந்தி வாசன் CHE
127. விஜி டேனியல் CHE
128. விண்ணரசி ரோஸ் CHE
129. வினோலியா வில்சன் VAN
130. வைலட் கிறிஸ்டோபர் TIN
131. வைலட் சைரஸ் CHE

## 2. இரண்டாம் பரிசு பெறுபவர்கள்[11 மாதங்கள் விடை எழுதியவர்கள்]

1. அமிர்தகனி பொன்ராஜ் CHE
2. அன்பு சுதந்திரம் TIN
3. அன்னாள் ஜெபக்கனி CBE
4. அனி பாய் ஜாண் TIN
5. அனிதா மோகன்ராஜ் ERO
6. சார்லஸ் ஃபின்னி DR. CHE
7. குளோரி ரவீந்திரன் TIN
8. ஞானராணி PAN TVL
9. ஜான்ஸி சந்தியா MAR
10. ஜெயா ஆல்பர்ட் KUM
11. ஜோஸ்பின் ஜெஸி CHE
12. கலா கிருபாகரன் TIN
13. மேபல் கிறிஸ்டியான் CHE
14. மல்லிகா ஜாய்ஸ்(ஜஸ்டினா) TCY
15. மரியாள் JS TUT
16. பமீலா எட்வின் KAN
17. பிங்க்லின் தேவமலர் சந்தோஷ் CHE
18. பிரேமா ஜானி PCM
19. சாந்தி ரோஸ் CBE
20. ஸ்டெல்லா டேவிட் TUT
21. சுகிர்தா சின்னதுரை TIN
22. சுமித்ரா B. CHE

## 3. மூன்றாம் பரிசு பெறுபவர்கள்[10 மாதங்கள் விடை எழுதியவர்கள்]

1. அருள்செல்வி VIR
2. சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
3. சித்ரா பெஞ்சமின் TVL
4. கிறிஸ்டி ஆயீட்டஸ் TIN
5. டெய்ஸி ஜெபதாஸ் TCY
6. கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
7. கிரேஸ்லின் சாந்தி எபநேசர் TIN
8. இந்திரா கெத்ஸி டேவிட் DR. TIN
9. ஜெபா சீனி MKM
10. ஜெனிட்டா ஹெலன் CBE
11. ஜென்சி ஞானேஷ் MUM
12. கிங்ஸ்லி ரவிக்குமார் CHE
13. மனோகரம் தனராஜ் NAZ
14. பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
15. பொன்மணி உத்தமசிங் NAZ
16. ரத்னா டென்னிஸன் CBE
17. ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
18. தனசீலி ஞானராஜ் CHE
19. உமா குளோரி CHE
20. விஜயராணி A. CHE

## இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 22

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-5 பகுதி-2

### 5. ஜெசுவைட்ஸ்஀ம் இந்திய திருச்சபையும்

### 2. கோரமண்டல் கடற்கரை மீனவ மக்களும் அவர்கள் திருச்சபை அமைப்பும்

இந்தியாவிலும் அதற்கு அப்பாலும் கிறிஸ்தவ பணிகளுக்கான வலுவான அடித்தளத்தை நிறுவுவதே இக்னேஷியஸுக்கும் சேவியருக்கும் முக்கிய நோக்கமாக இருந்தது. கோவா திருச்சபை பாதிரியாராக பணிபுரிய சேவியர் இந்தியாவிற்கு வரவில்லை. ஆனால் தேவன் தன்னை மிகவும் வித்தியாசமான வேலைக்கு அழைப்பதாக நீண்ட காலத்திற்கு முன்பே அவர் உணர்ந்தார். கவர்னர், சேவியரை அனுப்ப முடிவு செய்த பகுதியான கோரமண்டல் கடற்கரையில், மொகாம்பிக்கில் இருந்த கேப்-கேமரினோவின் பால் மற்றும் பிரான்சிஸ் மன்சில்ஹாஸ் என்போர் வந்தது, இந்த பகுதியில் 20-கிராமங்களில் பல கிறிஸ்தவர்களை உருவாக்க சாத்தியமாயிற்று. பல கிராமங்களில் வாழ்ந்த பரவாஸ் இன இந்துக்களின் வாழ்வாதாரம் கடினமான மீன்பிடி தொழில்தான்.

கி.பி.16ம் நூற்றாண்டில் பயனுள்ள சக்தியாக இருந்த பரவாஸ் தங்கள் உரிமைகளைப் பெற போராடும் நிலைதான் இருந்தது. தூத்துக்குடி கடற்கரையில் வசிப்பவர்கள் அனைவருக்கும் முத்துகுளித்தல் மற்றும் மீன்பிடிப்பதில் அதிக அனுபவம் இருப்பதை சேர-பாண்டிய மன்னர்கள் அறிந்திருந்தனர். இந்த கால கட்டத்தில், மூர்ஸ் (அரேபியர்) தென்னிந்தியாவிற்கு வருகை தந்து பண்டைய கொற்கை துறைமுகத்தை தங்கள் தலைமையகமாக எடுத்துக் கொண்டனர். தென்னிந்திய வர்த்தகத்தை ஏகபோகப்படுத்தும் செயல்பாட்டில் அரேபியரின் அதிகார மிரட்டலை முதலில் பரவாஸ் சகித்துக் கொண்டார்கள். ஆனால், பின்னர், இவை சகிக்க முடியாததாக மாறியபோது, கிளர்ச்சி ஏற்பட்டு அதிக எண்ணிக்கையிலான முஸ்லீம்கள் கொல்லப்பட்டதாக தெரிகிறது. இதனால்

பரவாஸ் இனத்தின் அழிவு அரேபியரின் பழிவாங்கும் முடிவில் நிர்ணயிக்கப்பட்டது. அவர்கள் பாதுகாப்புக்காக என்ன செய்வது என அறியாதிருந்தபோது, சட்டி ஜான் டாகுரூஸ் என்ற கோழிக்கோட்டை சேர்ந்த வணிகர் கி.பி.1513ல் போர்ச்சு கலுக்கு தூதராக அனுப்பப்பட்டார். அவர்தான் கி.பி.1534ல் போர்த்துகீசிய அரசரிடம் பாதுகாப்பு கோரும் யோசனையை பரவாஸ் இனத்தவருக்கு கொடுத்து, ராஜாவின் தயவைப் பெறும் வழிமுறையாக கிறிஸ்தவத்தை ஏற்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது என்பதை மக்களின் மனதில் பதித்தார். இவ்வாறாக முத்து-மீன்பிடி தொழில் செய்த மக்கள் திரளாக ஞானஸ்நானம் பெற்று போர்த்துகீசிய அரசரின் பாதுகாப்பை பெற்றனர். பிற்காலத்தில் கிராமங்களில் விடப்பட்ட பெண்களும் குழந்தைகளும் கிறிஸ்து-மந்தையில் சேர்க்கப்பட்டனர். கி.பி.1537ம் ஆண்டின் இறுதியில் பரவாஸ் சமூகம் முழுமையும் ஞானஸ்நானம் பெற்றிருந்தது.

இதன் பின்னரும் முஸ்லிம்கள், பரவாஸை விட்டு விடவில்லை. கட்டுப்பாட்டை மீறி, 1538ம் ஆண்டு ஜுன் 27ம் நாள் ‘வேதாளை’யில் பரவாஸ் மீது ஒரு பெரும் தாக்குதலை தொடுத்தனர். சண்டையானது போர் ஆக நீண்டு முஸ்லீம் களின் வெற்றியில் முடிந்தது. இந்த நேரத்தில்தான், மக்களின் தேவைகளை விசாரிக்கவும் அவர்களின் வாழ்க்கையில் அமைதியையும் ஒழுங்கையும் திரும்பக் கொண்டு வரவும் அனுப்பப்பட்ட பிரான்ஸிஸ் சேவியர் மணப்பாடு என்ற கடற்கரை கிராமத்தில் வந்திறங்கினார். தூத்துக்குடி-திருநெல்வேலி கடற்கரை பகுதியில் பரவாஸ் வாழும் 30 கிராமங்களை அவரால் கண்டுபிடிக்க முடிந்தது.

இந்த நேரத்தின் கடினமான பணியை எதிர்கொள்ளும். அரசியல் மற்றும் சமூக ஆற்றல் சேவியரிடம் இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஆனாலும், சேவியர், எளிமையான மற்றும் துறவு வழிகளில் இதற்குத் தன்னைப் பழக்கப் படுத்திக்கொண்டார். கடற்கரையில் இறங்கியவுடன், பல்வேறு கிராமங்களுக்குச் சென்று அவர்கள் வசிக்கும் இடங்களில், இன்னும் ஞானஸ்நானம் பெறாத அனைத்து குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். அனைத்து குழந்தை களுக்கும் அவர் பிரார்த்தனை, கட்டளைகள், வசனங்களைத் தமிழில் கற்பித்தார்.

ஆட்சி சிக்கலின்றி தொடரவேண்டுமானால் பெரும்பான்மை இந்துக்களைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று கருதிய காலனிய அரசு, மத மாற்றத்தை ஊக்குவிக்காமல், மத உணர்வுகளை எச்சரிக்கையுடன் அணுகி வந்தது. முடிந்த வரை கிறிஸ்தவ மதபோதகர்களை விட்டு அரசு விலகி நின்றது. ஆனால், மத போதகர்களோ, அரசின் துணை தங்களுக்கு இருப்பதாக எண்ணி தங்கு தடையின்றி கிறிஸ்தவத்தை மக்களிடம் கொண்டுசென்றனர்.

கோரமண்டல் பகுதியின் பரவாஸ் மக்களுக்கும் அவர்கள் திருச்சபைக்கும் புனித பிரான்சிஸ் சேவியரும், ஜெசுவைட்ஸும் புரிந்துள்ள சேவை அளப்பெரியது என்றால் அது மிகையாகாது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope’s College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

தேன்-துளி வேத வசனக் கதை-156

# அகந்தையால் அழிவு

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.Ed.

ஒரு காட்டுப்பகுதியில் ஒரு ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றின் மிகுந்த ஆழமான ஒரு பகுதியில் அதைக் கடப்பதற்கு குறுகிய வழியுள்ள ஒரு பாலம் இருந்தது. அந்த பாதை ஒரு நபரோ அல்லது ஒரு மிருகமோ மட்டும் நடந்து செல்லக் கூடியதாக இருந்தது. ஒரு முறை, அதின் ஒரு முனையில் ஒரு புலியும் அடுத்த முனையில் ஒரு புலியுமாக இரண்டு புலிகள் அந்த பாலத்தை கடந்த செல்ல நேர்ந்தது. அந்த இரண்டு புலிகளும் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்காமல், தானே முதலில் பாலத்தைக் கடக்க வேண்டும் என எதிரும் புதிருமாக வேகமாக வந்தன. இரண்டும் பாலத்தை நெருங்கி வந்தவுடன் தான்தான் முந்திக் கடக்க வேண்டும் என் எண்ணத்தில் கடுமையான சண்டை யிட்டதன் விளைவாக, அந்த இரண்டு புலிகளும் ஆற்றின் ஆழத்தில் விழுந்து மாண்டு போயின. சற்று நேரத்திற்குப் பின் அதே பாலத்தில் இரண்டு மான்கள் எதிர்-எதிர் முனையிலிருந்து வந்தன. இரண்டும் அருகில் நெருங்கி வந்ததுமே அந்த பாலத்திலுள்ள பாதையின் தன்மையை நன்கு உணர்ந்தன. ஒரு மான் படுத்துக்கெள்ள, அடுத்த மான் படுத்துக் கொண்டிருந்த மானின் முதுகில் ஏறி அடுத்தபக்கம் சென்றது. இவ்விதமாக இரண்டு மான்களும் ஒன்றுக்கொன்று சமரசமாய் விட்டுக்கொடுத்து தங்கள்-தங்கள் வழியில் பத்திரமாகச் சென்றன.

பிரியமானவர்களே! இன்று, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமையால் அநேக நாடுகளிலும், வீடுகளிலும், பணித்தளங்களிலும், சமுதாய-வட்டங்களிலும் சண்டை-சச்சரவுகள் ஏற்பட்டு மனநிம்மதியானது குலைந்துபோகிற நிலைகள் உள்ளன. அதின் காரணமாக வாழ்வில் கவலை, கண்ணீர், துயரம், மனவேதனை யுடன் வாழும் நிலை ஏற்படுகிறது. இத்தகைய நிலைகளிலேயே அநேகருக்கு இருதய நோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், மன அழுத்தம் போன்ற போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. அந்த இரண்டு புலிகளைப்போல் அல்லாது, மான்களைப் போலவும் இயேசு கிறிஸ்துவின் போதனைகளின்படியும் நாம், நம் உள்ளத்தின் அகந்தையை நீக்கி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் வாழ்வு வாழ்வோமானால், நம் உள்ளத்தில் மகிழ்ச்சியும் சமாதானமும் இருக்கும். ஆகவே, அகந்தை நீக்கி அமைதி வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம். வேதம் இவ்வாறு கூறுகிறது:

இருதயத்தின் அகந்தை மோசம் போக்கும். எரே 49:16

அகந்தை வந்தால் இலச்சையும் வரும். நீதி 11:2

மனுஷனுடைய அகந்தை அவனை தாழ்த்தும். நீதி 29:23

அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும். நீதி 13:10

அகந்தையாய் நடக்கிறவர்களை கர்த்தர் தாழ்த்துகிறார். தானி 4:37



சகோ. அசரியா

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, 'Ratchippu' Tamil Christian Monthly, Chennai-93. Mobile: 9962924900

## ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்திய பாராளு மன்ற தேர்தல்கள் நேர்மையாக நடைபெற... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பி.ஹெச்.டி வரையில் இறுதித் தேர்வை எழுதியுள்ள நம் பிள்ளை களுக்கு நல்ல ரிஸல்ட் கிடைக்க... 12ம் மற்றும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியிருக்கிற நம் பிள்ளைகள், சிறப்பாக 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியுள்ள எஸ்தர் பெரின், ஜசிந்த் ஹேனா, ஷீபா ஆகியோருக்கு சிறந்த ரிஸல்ட் கிடைக்க...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) REV. கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி திருமதி. ஜெயசீலி தர்மராஜா, திருமதி. வி. மல்லிகா, REV. தர்மராஜா, திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரது சரீர சுகத்திற்காக...

8) திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ஞானசெல்வி மோசஸ், சகோ. கிரேஸ் திவ்யா, சகோ. சவேரியம்மாள், திருமதி. ரூபி போஸ்கோ, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திருமதி. கிறிஸ்டி ஞானராஜ், திருமதி. கலையரசி செல்வராஜ், திருமதி. சுஜாதா சாம், திரு. ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண் ஸன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோருக்காக அவர்களுடைய குடும்பத்தாருக்காக..

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th May 2024.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.



# செய்தித்துளிகள்

1. ஐரோப்பிய நாடுகளின் வெப்ப அதிகரிப்பு வேகம் சர்வதேச சராசரியைவிட 2மடங்கு அதிகமாக இருப்பதால், உலகில் மிக வேகமாக வெப்பமடையும் கண்டமாக ஐரோப்பா உள்ள தாக ஐ.நா-வின் உலக வானிலை மையம் (WMO) தகவல்.

2. இளங்கலை 4-ஆண்டு பட்டப்படிப்பு முடித்தவர்கள் (75சத வீதம் மதிப்பெண்கள் அல்லது சமமான கிரேடு பெற்றவர்கள்) நேரடியாக பி.எச்.டி. படிப்பில் சேரலாம்; ‘நெட்’ தேர்வும் எழுதலாம் என பல்கலை மானியக்குழு தலைவர் அறிவிப்பு.

3. சென்னை பல்கலை இலவச கல்வி திட்டத்தில் இளங்கலை படிப்பில் சேர வருட வருமானம் ரூ.3லட்சம் வரை உள்ள மாணவர்கள், +2 முடிவுகள் வெளிவரும் தேதிமுதல் www.unom.ac.in இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என தகவல்.

4. இந்திய உணவு சட்டங்களில் ‘ஆரோக்ய-பானம்’ குறித்து போதிய வரையறை இல்லாததால், போர்ன்விட்டா உள்ளிட்ட பானங்களை ‘ஆரோக்ய-பானம்’ பிரிவிலிருந்து நீக்க உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் உத்தரவு.

5. இவ்வாண்டின் இறுதியில் இந்தியா - சீனா இடையே (குகேஷ் VS டிங்லிரன்) நடைபெறும் உலக செஸ் சாம்பியன் ஷிப் போட்டியை இந்தியாவில் நடத்த முயற்சிகளை மேற் கொண்டுள்ளதாக இந்திய செஸ் சம்மேளனம் தகவல்.

Posted on: 10th May 2024

To

## மே தின நல்வாழ்த்துகள்

**இரட்சிப்பு** **HAPPY MAY DAY**

பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப வீரர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், வேதாகம போட்டிகளில் பங்கு பெறுவோர், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள், மற்றும் இரட்சிப்பு விசுவாசக் குடும்பத்தார் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த **மே-தின நல்வாழ்த்துக்கள்.**




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

If undelivered Please return to:
**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.